# வாக்குமூலம்
## தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
## வழக்கு எண் : CC.No. 108/2022
## வழக்கு சாட்சி PW–1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலமுருகன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சண்முகவேல் | தொழில் | : | டிரைவர் |
| கிராமம் | : | வலசை | வயது | : | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 25th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் வலசையில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். இன்று ஆஜர் எதிரி மாரியப்பன் என்னுடைய சகோதரர். எதிரி மனோஜ் அவருடைய மகன். கடந்த 04.09.2020 அன்று நான் கேரளாவில் லாரி ஓட்டிக்கொண்டிருந்தபோது, காலை 09.00 மணியளவில் எதிரி எனக்கு போன் செய்து என் மனைவி தேவையில்லாமல் பேசி சண்டையிடுகிறாள் என்று என்னிடம் சொன்னார். நான் எதற்கு என்று கேட்டபோது, எங்களுக்கு பொதுவாக பாத்தியப்பட்ட வீடு சம்பந்தமாக என்று சொன்னார். நான் உடனே என் மனைவியிடம் போன் செய்து கேட்டபோது, அவர் எதிரி மாரியப்பன் தான் என்னிடம் பிரச்சனை செய்து வருகிறார் என்று சொன்னார்.

நான் மீண்டும் மாரியப்பனுக்கு போன் செய்து, எதுவாக இருந்தாலும் வீட்டிற்கு வந்து பேசிக்கொள்ளலாம் என்று சொன்னதற்கு, அவர் என்னிடம் "நீ வீட்டிற்கு உடனே வா" என்று தகாத வார்த்தைகளால் என்னிடம் பேசினார். நான் 05.09.2020ம் தேதி எனது லாரியை எங்கள் ஊருக்கு எடுத்து கொண்டு வந்து லாரியை வழக்கமாக விடும் இடமான ஜக்கம்மாள் கோவில் அருகே நிறுத்தி விட்டு வண்டியின் அருகிலேயே படுத்து விட்டேன். அன்றைய தினம் காலை 04.000 மணியளவில் மாரியப்பன், அவரது மகன்களுடன் வந்து என்னை எழுப்பி "வீட்டிற்கு வா பேசிக்கொள்ளலாம்" என்று கூப்பிட்டார்கள். எனது அப்பா கடைக்கு நேரே சென்று பேசுவதற்கு சென்றபோது, மனோஜ் இரும்பு ராடால் என் மண்டையில் அடித்தார். அதை எனது இடது கையால் தடுத்தபோது, இடது கையிலும் இரும்பு ராடால் அடித்ததில் எனது இடது கை உடைந்து விட்டது. விமல் என்னை பிடித்து கொள்ள மாரியப்பனும் பெல்ட்டால் என்னை முதுகில் அடித்து காயப்படுத்தினார்.

நான் சத்தம் போடவே, என் சத்தம் கேட்டு என் அப்பா, என் மனைவி, என் மகள், அருகில் இருந்தவர்களும் வந்து எதிரிகளை பார்த்து சத்தம் போட்டு விலக்கி விடவும், எதிரிகள் மூவரும் என்னை பார்த்து "உன்னை சும்மா விடமாட்டோம்" என்று மிரட்டி விட்டு சென்று விட்டார்கள். சம்பவத்தை பார்த்த எனது மனைவி, மகள், மலைச்சாமி ஆகியோர் அவரது ஆட்டோவில் ஏற்றி கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். அங்கு முதலுதவி சிகிச்சை செய்து விட்டு, மேல்சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் அறிவேன் சாட்சியாக எனது தம்பி ராஜசேகர்,

அவரது சித்தப்பா மகன் பாலமுருகன் ஆகியோர் கையெழுத்து செய்தார்கள். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.26 12:01:24 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No. 108/2022**
**வழக்கு சாட்சி PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பொன்மணி | தாலுகா | : | |
| கணவர் பெயர் | : | பாலமுருகன் | தொழில் | : | குடும்ப பொறுப்பு |
| கிராமம் | : | வலசை | வயது | : | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 25th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் வலசையில் குடியிருந்து வருகிறேன். நான் குடும்ப பொறுப்பு வகித்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். எதிரி மாரியப்பன் என்னுடைய கொழுந்தனார். எதிரி மனோஜ் அவருடைய மகன். நானும், எனது கணவரும் என் மாமனார், மாமியாருடன் குடும்பமாக இருந்து வந்தோம். வீடு சம்பந்தமாக எதிரி மாரியப்பன் எங்களிடம் பிரச்சனை செய்து வந்தார். கடந்த 04.09.2020ம் தேதியில் எனது கணவர் கேராளவில் இருந்து லாரியில் ஊருக்கு வந்தார். ஜக்கம்மாள் கோவில் அருகே அடுத்த நாள் 05.09.2020 அன்று அதிகாலை 04.00 மணியளவில் சத்தம் கேட்டு, நானும், எனது மகளும் சென்று பார்க்கும்போது, எனது கணவர் இரத்தக்காயத்துடன் இருந்தார். அப்போது, எதிரி மாரியப்பன் பெல்ட்டால் எனது கணவரை அடித்தார். ஏற்கனவே, எதிரிகள் இரண்டு பேரும் என் கணவரை அடித்து கொண்டிருந்தார்கள்.

நான் போகும் போது, என்னுடைய கணவருக்கு தலை, கை ஆகிய இடங்களில் இரத்தக்காயம் ஏற்பட்டு இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. கை ஒடிந்திருந்தது. நானும், என்னுடைய மகளும் தடுத்தபோது, எதிரி மாரியப்பன் என்னையும், எனது மகளையும் பெல்ட்டால் அடித்தார்கள். பின்பு எதிரிகள் இருவரும் செருப்பாலும் அடித்தார்கள். தேவடியா மவளே என்று தகாத வார்த்தைகளால் பேசினார்கள். ஆட்டோ ஓட்டும் அண்ணன் எதிரிகளை சத்தம் போட்டு விரட்டி விட்டார்கள். எதிரிகள் எங்களை மிரட்டி விட்டு சென்று விட்டார்கள். காயம்பட்ட என் கணவரை நானும், என் மகளும், ஆட்டோ ஓட்டும் அண்ணனின் ஆட்டோவில் ஏற்றி கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். அங்கிருந்து தென்காசி அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் மேல்சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். அங்கு வந்த போலீசாரிடம் நடவடிக்கை எடுக்க புகார் வாக்குமூலம் எனது கணவர் கொடுத்தார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.26 12:01:33 +0530